ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1889/29 - 2014 නොවැම්බර් මස 19 වැනි බදාදා - 2014.11.19
*1889/29 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்
## ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

**மத்திய மாகாண மாகாண சபை**

மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்

மத்திய மாகாண ஆளுநர் டிகிரி பண்டா கொப்பேகடுவ ஆகிய நான், 13 ஆம் அரசியலமைப்பு சட்டத்தினால் திருத்தப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 154 (ஆ) சட்டத்தில் 8 (ஆ) அத்தியாயத்தின் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகார தத்துவங்களுக்கு ஏற்ப இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய மாகாண சபையின் ஆறாவது சபையின் இரண்டாவது கூட்டவாரம் முடிவுறுத்தப்படும் என்பதை இத்தால் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 08 (அ) அத்தியாயத்தின் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகார தத்துவங்களுக்கு ஏற்ப, மேற்குறிப்பிட்ட சபையை இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பல்லேகலையில் அமைந்துள்ள மாகாண சபை நிர்வாக சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதியிலுள்ள புதிய மாகாண சபை கருமபீடத்தில் மீண்டும் ஒன்று கூடலுக்குரிய அழைப்பு இத்தால் விடுக்கப்படுகின்றது என்பதையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

டிகிரி பண்டா கொப்பேகடுவ,
மத்திய மாகாண ஆளுநர்.

இரண்டாயிரத்து பதிநான்காம் ஆண்டு
நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி
கண்டியில் கையொப்பமிடப்பட்டது.

*12- 126*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.